# நீலகிரியில் வாழும் தோடரின் நாடக வளர்ச்சி

**நா. யாதவ் குமார்**

**தமிழ்த்துறை, கதிர் கல்வியியல் கல்லூரி,**

**நீலாம்பூர், கோயம்புத்தூர்.**

72

**ஆய்வு சுருக்கம்:**

"தோடர் இன மக்கள் தொல்பழங்குடினர் என அழைக்கப்படுகிறது. இவர்கள் நீலகிரி மாவட்டத்தில் மட்டுமே வாழ்ந்து வருகின்றன. தோடர் இன மக்கள் நாடகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. இதில் பாடல் ஆடல் என அவர்களின் நாடகத்தை வளர்ச்சி பெற்று வருகின்றனர். இவர்களின் பாடல் இயற்கை சார்ந்த இருக்கும் இவர்கள் நாடக அமைப்பினை கொண்டு வளர்ச்சி அடைகின்றன. தோடர் இன மக்கள் நாடகத்தில் பெரும் முக்கியத்துவம் கொடுப்பதால் இவர்களின் கலாச்சாரம் முன்னோர்களை பின்பற்றிய அமைகின்றது. தோடர் இன மக்களின் பற்றி விரிவாக இக்கட்டுரையில் காண்போம்.

**திறவுச்சொல் :** தோடர், வனப்பகுதி, பழங்குடி., வெளிப்பாடு.

**முன்னுரை:**

"அடர்ந்த வனப்பகுதிகளும் மழை குன்றுகளும் கொண்ட வாழ்விடம் நீலகிரி ஆகும். நீலகிரியில் ஆறு வகையான பழங்குடினர் வாழ்ந்து வருகின்றனர். பழங்குடி என்றாலே பழமை குடி என்று பொருள் அதில் தொன்மையாக கருதப்படும் பழங்குடி தோடர் இன மக்கள் ஆவார்கள். இவர் பல்லாயிரம் ஆண்டுக்கு முன்னே தோன்றியுள்ளதால் இவர்கள் தொல்பழங்குடினர் என ஆய்வாளர்கள் கூறுகின்றன.

**கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே**
**வாளோடு முன் தோன்றிய மூத்தக் குடி பழங்குடி.** **பு. வெ. மா**

தோடர் இன மக்கள் நீலகிரியில் மட்டுமே வாழ்ந்து வருகின்றன. அவர்களின் வளர்ச்சியே நாடகத்தின் மூலம் வெளிப்பாடு செய்கின்றன. இவர்களின் நாடகத்தை எப்படி வெளிப்பாடு செய்கின்றனர் என்பது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**நாடகத்தில் தோடர்களின் வளர்ச்சி:**

"நாடகம் பல ஆண்டுக்கு முன்னே தோன்றி உள்ளதால் இவர்களின் நாடகத்தில் மூலம் தோடர் இன மக்கள் ஆடல் பாடல் மூலம் இவர்களது வெளிப்பாட்டினை செய்கின்றனர்.

**உலகமே ஒரு நாடக மேடையில்.**

இவ்வின மக்கள் பல ஆண்டுக்கு முன்னே நாடகத்தின் பழமை மூலம் இவர்கள் இனத்திற்குள்ளேயே நாடகத்தை வளர்த்து வந்துள்ளனர். இன்றைய காலத்தில் அவர்கள் நாடகத்தில் பெரும் முக்கியத்துவம் கொடுத்து அவர்களை பாடல் ஆடல் வெளிப்பாடு செய்கின்றன இவ்வாறு நாடகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து பாடல் பாடியும் ஆடல் ஆடியும் தோடர் இன மக்கள் வளர்ச்சி அடைக்கிறன.

**தோடர்களின் பாடல்:**

தோடர் இன மக்கள் பாடலைக் கேட்பதற்கு மிகப் பழமையான முறையில் இருக்கும் ஒவ்வொரு பாடும் கேட்பதற்கும் ஒரே மாதிரியாக இருந்தாலும் அதில் பல்வேறு பொருள் இருக்கின்றன அதில் பல்வேறு வேறுபாடுகள் இருக்கின்றன.

அவைகள்

1) இயற்கை
2) விவசாயம்
3) வாழ்க்கை
4) தெய்வம்
5) குழந்தை

இவ்வகை பாடல்கள் இன்றைய கால வரை பாடல்களை பின்பற்றி வருகின்றனர். குழந்தை பாடல் என்பது குழந்தைக்கு பெயர் சூட்டும் விழாவில் அனைவரும் குழந்தையை போற்றும் விதமாக ஆடல் பாடல் என ஆடி மகிழ்வாக இருக்குவார்கள்.

**இயற்கை:**

தோடர் இன மக்கள் அதிகமாக இயற்கையைத்தான் வழிபட்டு வருகின்றனர். இவர்களது வழிபாடு எப்படி இருக்கும் என்றால் பாடல் மூலமாகத்தான் அதிகமாக வழிபாடு இருக்கும். தோடர் மக்கள் இயற்க்கை நம்பி இருப்பதால் இயற்கையை தெய்வமாக நம்பி பாடலை பாடி வழிபாடு செய்கின்றன.

சூரியன்

மரம்

நட்சத்திரம்

நிலா

இவ்வகை இயற்கையை வைத்து பாடலை பாடியும் வழிபாட்டு செய்து இயற்கைக்கு முக்கியத்துவம் தருவதால் இவர்கள் இயற்கையை தெய்வமாக நம்பி வழிபாடு செய்கின்றன.

**விவசாயம்**

அனைவருக்கும் தேவையான ஒன்று உணவாகும் அந்த உணவானது ஒவ்வொரு விவசாயத்தில் இருந்துதான் வருகிறது அதே மாதிரி தான் இத்தோட மக்கள் விவசாயத்திற்கு பெரு முக்கியத்துவம் கொடுத்து அதனை எவ்வாறு வழிபாடு செய்கின்றன என்றால் பாடல் மூலம் வழிபாடு செய்கின்றன இப்ப ஆடல் மூலம் அவர்கள் எங்கள் விவசாயம் செழுமையாக இருக்க வேண்டும் என்பதே இப்பாடலின் கருத்தாக விளங்குகிறது இவ்வகை பாடல்கள் நாடக வளர்ச்சிக்கு ஒரு பெரிய முக்கியத்துவம் தருகின்றது.

**தெய்வமும் நாடகமும்:**

"தோடர்கள் அதிகமாக இயற்கை தெய்வத்தை நம்பி வருகின்றனர். இவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு விழாக்களை நடத்தி வருகின்றனர் இதன்மூலம் அவர்களின் அவர்களின் நடனமும் பாடலும் வெளிப்பாடு செய்வதற்கு விழாக்கள் மூலம் நடத்தி வருகின்றனர். அந்த விழாக்களில் ஒரே மாதிரியான ஆடையை அணிந்து பாடலும் பாடியும் ஆடியும்

மகிழ்கின்றனர். இதன்மூலம் நாடகத்திற்கு பெரும் முக்கியத்துவம் கொடுப்பதால் நாடகத்தின் தோடர்இன மக்களின் வளர்ச்சி அடைகின்றன என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தோடரின் நடனத்தின் நாடகத்தின் முக்கியத்துவம்:

"தோடரின் இன மக்கள் நடனம் ஆடுவது ஒரு மிகப் பழமையான முறையாக இருக்கிறது. அவர்கள் நடனம் பார்ப்பதற்கு ஒரே மாதிரியான நடனமாடி அவர்களின் நடனத்தை வெளிப்பாடு செய்கின்றனர். இவர்கள் ஒரே மாதிரியான ஆடை அணிந்து ஒரே மாதிரியாக ஆடுவது கண் கவரும் வகையில் இருக்கின்றன. பார்ப்பதற்கு ஆர்வமாக இருக்கின்றது.

**மெல்ல நடந்தது நடந்தது அடித்தல்**

**நடந்தது நின்று நடந்தது அடித்ததல்** **நா. க. பாடல்**

இதன் மூலம் இவர்கள் நாடகத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. திருமண நிகழ்வு திருவிழா நேரங்கள் குழந்தை பெயர் சூட்டு விழா போன்ற விழாக்களுக்கு இவர்கள் அதிகமாக ஆடி பாடி அவர்களின் கலாச்சாரத்தை வெளிப்படுத்துகின்றன. இதனால் நாடகத்தில் மூலம் வளர்ச்சி அடைவதால் நாடகத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதால் தோடர் இன மக்கள் அவர்களது கலாச்சாரத்தை பின்பற்றி வருகின்றனர்.

**முற்பத் திருவிழாக்கும் நாடகத் தொடர்பும்:**

"முற்பத் பண்டிகை என்பது தோடர்களுக்கு ஒரு முக்கியமான திருவிழா ஆகும். இந்த பண்டிகையின் மூலம் நீலகிரி உள்ள அனைத்து தோடர் இன மக்களும் ஒன்று சேர்ந்து அங்கு ஒரே மாதிரியான ஆடையை அணிந்து பாடல் பாடி ஆடியும் மகிழ்கின்றனர். இந்த திருவிழா ஆனது மிகவும் பழமையான திருவிழா ஆகும். இதனால் அங்கு ஒரு நாடக அரங்கேற்றம் நடைபெறுவதாக இருப்பதால் அங்கு ஏராளமான மக்களும் வெளிநாட்டு மக்களும் வந்து காண்கின்றனர். இதனால் நாடகத் தொடர்பு முக்கியத்துவம் இருக்கின்றது என கருதப்படுகின்றன. இந்த பண்டிகை முற்காலத்தில் இருந்தும் இக்காலம் வரை பின்பற்றி வருகின்ற. முற்காலத்தில் அவர்கள் இனம் மட்டுமே கொண்டாடப்பட்ட பண்டிகையானது இன்றைய காலத்தில் நாடகம் தொடர்பு உள்ளதால் அனைத்து மக்களும் மற்றும் வெளிநாட்டு மக்களும் காண்பதற்கு ஏற்பதாக உள்ளது இந்த இன பண்டிகை மூலம் அனைவரும் பழங்குடினர் பண்டிகை என அறிய முடிகிறது.

**தோடரின் தேர் திருவிழாவும் நாடகத்தின் வளர்ச்சியும்:**

தோடர் இன பண்டிகை என்றாலே நடனமும் பாடலும் தான் அதிகமாக இருந்து வருகிறது அதை ஈடு செய்யும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் தேர் திருவிழா என்று கொண்டாடப்படுகின்றன இந்த தேர் திருவிழா மூலம் அவர்கள் பாடல் நடனமும் ஆடி மகிழ்வதன் மூலம் நாடகத்திற்கு பெரும் முக்கியத்துவம் கொடுத்து வளர்ச்சி செய்கின்றனர். இவ்வகையில் நாடகமும் மற்றும் பாடி மகிழ்வதால் அதிக பொதுமக்கள் காண்கின்றதால் இவ்விதம் மக்களும் பரவுவதற்கும் நாடகம் வளர்ச்சிக்கும் ஒரு பெரும் முக்கியத்துவமாக இருந்து வருகின்றது. தோடர் இனத்தை விளிம்பு நிலையில் இருந்து வளர்ச்சி நிலைக்கு கொண்டுவருவது இவ்வின மக்களின் நாடகத்தின் தொடர்பு உள்ளதால் இவ்விதம் மக்கள் வளர்ச்சி அடைகின்றனர்.அடைகின்றனர்

**முடிவுரை:**

நாடகத்தின் மூலம் தோடர் இன மக்கள் வளர்ச்சி பெற்றதும் அவர்களின் நடனம் பாடல் மிகப்

பழமையானது என்று அதனை இன்றைய காலம் வரை வளர்ச்சியின் மூலம் வெளிப்பாடு செய்கின்றனர். இவ்வின மக்கள் விளிம்பு நிலையில் இருந்தாலும் இவர்களின் பாடல், ஆடல் நாடகத்தின் மூலம் வெளிப்பாடு செய்வதால் இவர்கள் இனம் வளர்ச்சி அடைகின்றத. என கருதலாம். தோடர் இன மக்கள் நாடகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து இவ் இன மக்கள் வளர்ச்சி அடைந்து வருகின்றனர். இன்றைய காலம் வரை நாடகத்தின் மூலம் இவர்கள் ஆடல் பாடல் என கொண்டாட்டத்தின் மூலம் மக்கள் விளிம்பு நிலைக்கு செல்லாத நிலையில் இருக்கிறது. இதுவே எனது ஆய்வு கட்டுரை ஆகும்.

வாழ்க தமிழ் வளர்க்க தமிழ்

ஆய்வு களம்

நீலகிரி மாவட்டம் மினி மந்து என்ற ஊரில் ஆய்வு செய்யப்பட்டன.

**துணை நூல் பட்டியல்:**

1) தமிழகப் பழங்குடிகள் - பக்தவத்சல பாரதி
2) நாட்டுப்புறக் கலைகள் - முனைவர் ஆறு. இராமநாதன்.
3) தமிழக தொல்குடிகள் - ரங்கசாமி
4) நாட்டுப்புறக் ஆடல்கள் - முனைவர் பாக்கியமேரி.